திரு. டி. மார்டின் : அவைத் தலைவர் அவர்களே, சிறைச் சாலையில் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிற கைதிகளில் சிலர் காச நோயினால் அவதிப்படுகின்றார்கள். அவர்கள் சென்னை அருகிலுள்ள காச நோய் ஆஸ்பத்திரிக்கு வரும்போது, அவர்களைச் சரியான முறையில் குணப்படுத்தாத முறையில், திரும்ப அவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுகிறார்கள் என்ற நிலைமை இருப்பதுபற்றி இந்த அரசு கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படியொரு நிலைமை இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. கனம் உறுப்பினர் குறிப்பிட்ட ஏதாவது ஒரு நிலைமை இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

Madras Public Buildings (Licensing) Act

* 89 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government had made it obligatory on the part of the owners of the existing public buildings to take out licences under the Madras Public Buildings (Licensing) Act, 1965; and

(*b*) if so, by which date?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1—4—1969 முதல். இதற்கான விண்ணப்பங்களை 1—4—1968-க்கு முன்பு அனுப்பிவிட வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, under this Act it is obligatory on the part of the owners of buildings to take out a licence. So, will the Government come forward to make it a compulsory affair?

(No reply)

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கட்டடங்கள் நல்ல முறையில் அமைந்து பாதுகாப்பாக இருக்கவும், தொழில் நடத்துவதற்குரிய முறையில் அமைந்திருக்கவும், மாவட்ட நகரமைப்பு விதிமுறைகளிலும், மாவட்ட சுகாதார பிரிவின் விதி முறைகளிலும் போதுமான நிபந்தனைகள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவ்வப்போது மராமத்து செய்யும் போது, கட்டடங்களைப் பார்வையிட்டு, தகுந்த நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். அவ்வாறிருக்க, அதே நோக்கத்திற்காக இந்தப் புதிய சட்டம் தேவையில்லை என நான் கருதுகிறேன். இந்தப் புதிய சட்டம் அமலுக்கு வருமானால், சிறிய கடைக்காரர் கள் பலவிதத் தொந்தரவுகளுக்கு உள்ளாவார்கள். அரசாங்க அதிகாரிகளின் தலையீடுகள் அவசியமற்ற முறையில் அதிகமாகும். ஆகவே, பொதுமக்களின் ஒருமித்த நன்மையைக் கருதி இந்தச் சட்டத்தைக் கைவிட அரசு ஆலோசிக்குமா ?

1968 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம், பொது மக்கள் செல்லக்கூடிய இடங்களில் கட்டடங்கள் பழுதடைந்தவையாக இருந்தால், அவற்றினால் பொதுமக்களுக்கு ஆபத்து வருகிறது என்ற நோக்கத்திலே கொண்டுவரப்பட்ட தாகும். மதுரையில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக அது கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்தச் சட்டம் நடைமுறையில் எந்த எந்தக் கட்டடங்களுக்கு அமலாக்கப்படும் என்று 'டெஃபனிஷன் ஆஃப் பில்டிங்'-இன்படி வரும்போது சில பேருக்குப் பாதகமாக இருக்கிறது என்ற கோரிக்கைகளெல்லாம் அரசாங் கத்திற்கு வந்திருக்கின்றன. அதை அப்போதைக்கப்போது பரிசீலித்து, எந்த எந்தக் கட்டடங்களுக்கு அது அமல் நடத்தப் பட வேண்டும், எந்த எந்தக் கட்டடங்களுக்கு இதிலிருந்து விதி விலக்கு தரப்படவேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயிக்கும்.

திரு. அ. லெ. சுப்ரமணியம் : மெட்ராஸ் பப்ளிக் பில்டிங்ஸ் (லைசன்ஸிங்) ஆக்டின்படி இருக்கும் சங்கடங்கள்பற்றி அமைச்சர் அவர்களுக்கு திருநெல்வேலி வியாபாரிகள் சங்கம் ஒரு மனுவைத் தந்தார்களா ? இப்பொழுதுள்ள சட்டப்படி, சிறு கடைகள் கூட அந்தச் சட்டத்திற்குட்பட்டு வருகின்றன. அதைத் தவிர்த்து, பப்ளிக் ஆக்ஸெஸ் இல்லாத சிறு கடைகளுக்கு விதி விலக்கு தரும் அளவுக்கு டெஃபனிஷன் ஆஃப் தி ஷாப் என்பதைத் திருத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட கோரிக்கைகள் பல இடங்களிலிருந்து அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. பொது மக்கள் செல்ல வேண்டிய இடம் என்றால், சிறு கடைகளையும் குறிக்கத்தான் செய்யும். டெக்னிகலாக அப்படிக் குறிக்கத்தான் செய்யும். ஏற்கனவே கட்டியிருந்த சிறு கடைகளெல்லாம் இந்தச் சட்டத்திற்கு ஒத்ததாகக் கட்டப்பட வேண்டும் என்று வற்புறுத்தும்போது மக்களுக்கு இடையூறாக இருப்பதாக மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து முடிவு செய்யும்.

திரு. கே. விநயகம் : பொதுமக்கள் அதிகமாகச் செல்கிற கட்டடங்களுக்குத்தான் அதுவும் தனிப்பட்டவர்கள் வசமாக இருக்கும் கட்டடங்களுக்குத்தான் இம்மாதிரி லைசன்ஸ் எடுக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் சொல்லுகிறது. ஆயினும் அரசாங்கத்திற்கு உடைமையாக இருக்கும் கட்டடங்கள் எப்படி யிருக்கின்றன என்று பார்த்தால், உள்ளே போகிறபோதே 'தட', 'தட' என்று ஆடுகிற கட்டடங்கள் பலவற்றை நான் பார்த்திருக் கிறேன். குறிப்பாக, சைதாப்பேட்டையில் உள்ள டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் ஆபீஸ் அந்த நிலையில் இருக்கிறது. ஆகையால், அப்படிப்பட்ட கட்டடங்களை இந்தச் சட்டத்திற்கு உள்ளிட்டுக் கொண்டுவர முடியுமா ? அதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? இல்லையென்றால், அந்தக் கட்டடங்களை இடித்து விட்டுப் புதுக் கட்டடங்கள் கட்ட அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஓராண்டுக்குள் கட்டிய கட்டடம் ஏதும் ' தட ', ' தட ' என்று இருப்பதாகத் தெரிய வில்லை. (ஆரவாரம்). அதற்கு முன்னல் அப்படிக் கனம் அங்கத்தினர் அனுபவத்தில் பார்த்திருந்தால், அதைப்பற்றி எழுதி யனுப்பினுல், இந்த அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

]குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைக் கேள்விகள்

(i) ' மாலைமணி ' நாளிதழில் வந்த செய்தி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பாலசுப்ரமணியன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிருர்கள். அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது—

" சென்ற மாதம் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது ஏற்பட்ட பதட்ட நிலைபற்றி விவாதிக்கச் சட்டப்பேரவை யின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோரி நான் ஒரு கடிதம் எழுதினேன். அதுபற்றி என்னைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது, அவ்விதம் கோரப்போவதாக அவர் களிடம் தெரிவித்தேன். சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் என் கடமையை நான் செய்யும்போது சென்னை யிலிருந்து வெளிவரும் ' மாலை மணி ' என்னும் நாளிதழ் 31—12—1967 தேதிய வெளியீட்டில் நான் அவ்வாறு கோரியதைக் கேவலமாக விமர்சித்தும், என்னைப் பயமுறுத்தியும் விமர்சித்திருக் கிருர்கள். அந்த இதழையும் இத்துடன் இணைத்திருக்கிறேன். குறிப்பிட்ட அக்கட்டுரை சட்டசபை அங்கத்தினரின் உரிமையை மீறியதாகுமென்று நான் கருதுகிறேன். ஆகவே, ' மாலை மணி ' நாளிதழ் ஆசிரியரும் வெளியிடுபவருமான திரு. பி. எஸ். இளங்கோ அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையைச் சபையில் எழுப்பத் தங்கள் இசைவை வேண்டுகிறேன்."

இதுபற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும்.

(ii) தமிழக அரசு தலைமைச் செயலகத்திற்கும் பேரவை மண்டபச் சுற்றுப்புறங்களுக்கும் பார்வையாளர் வருகையை ஒழுங்கு படுத்தல்.

Mr. Deputy Speaker :

Hon. Member Thiru N. S. V. Chithan has given notice of a Privilege Motion in regard to regulation of visitors to the Secretariat Buildings and the Precincts of the House. This matter of privilege will be taken up later.